வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண். CC 106/2021
வழக்குசாட்சி LW3/PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூபதி | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாஸ்கரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 30 |

தேதி 12.02.2026
எதிரி ஆஜர்.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் போரூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடன் ஏசி மெக்கானிக் வேலைச் செய்து வருபவர். 2019 ம் ஆண்டு ரெட்டேரி பாலத்திற்கு கீழ் உள்ள அப்பார்ட்மன்டில் வேலைப் பார்த்துக் கொண்ட்டிருந்த போது சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்த போது பாலச்சந்தர் தலையில் அடிப்பட்டு கீழே 3வது மாடியில் இருந்து விழுந்துக் கிடந்தார். பின்னர் அரசு ஸ்டேன்லி மருத்துவமனை அழைத்துச் சென்றோம். இறந்துவிட்டதாக்க் கூறினார்கள். போலீசார் விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் இறந்த பாலச்சந்தர், ஆஜர் எதிரி அனைவரும் தினக்கூலியாக ஏசி மேக்கானிக் வேலை செய்து வருகிறோம் என்றால் ஆமாம். நாங்கள் அனைவரும் New Brushing Point கம்பெனியில் வேலைப் பார்த்து வந்தோம் என்றால் ஆமாம். சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால் ஆமாம். இவ்விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**